யாழ்ப்பாணம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 புரட்டாதி 19 முறை 19 இதழ் 237
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 5-10-1985

### அரச, கூட்டுத்தாபன ஊழியர் மட்டக்களப்பு செல்ல அரச அதிபர் ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்) போக்குவரத்துவசதி இன்றி மட்டக்களப்புக்குச் செல்ல முடியாமல் இருக்கும் அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் அங்கு செல்வதற்கு, வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்றை யாழ். அரசாங்க அதிபர் ஏற்பாடு

[5-ம் பக்கம் பார்க்க]

### பொதுஸ்தாபன பிரதிநிதிகள் அமைச்சரை சந்திப்பார்கள்

(திருகோணமலை) திருகோணமலைப் பகுதியில் தமிழர் படுகொலைசெய்யப்படுவது குறித்தும் அப்பாவித் தமிழர்கள் கைதுசெய்யப்படுவது குறித்தும் அங்கும் பொது ஸ்தாபனங்கள், தேசிய பந்தோபஸ்து அமைச்சரை விரைவில் சந்தித்து புகார் செய்ய

8 ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற அங்கத்தவர்: 225 ஆக அதிகரிக்கும்!

(கொழும்பு) தற்போது 168 அங்கத்தவர்களைக் கொண்டிருக்கும் பாராளுமன்றப் பிரதிநிதித்தவ எண்ணிக்கை 225 ஆக அதிகரிக்கப்படவுள்ளது. இதற்கான அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் வெகுவிரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

புதிய தெரிவில் மாவட்ட ரீதியாக 196 பிரதிநிதிகளும், தேசிய அடிப்படையில் 29 பேரும் தெரிவாவர்.

தேசிய ரீதியில் தெரிவு செய்யப்படும் 29 பிரதிநிதிகளும் இலங்கையின் சகல அரசியற்கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இவர்கள் போட்டியின்றியும் தெரிவு செய்யப்படுவார்கள்.

மாவட்டரீதியில் தெரிவு செய்யப்படும் 196 அங்கத்தவர்களும் பழைய தேர்தற்சட்டத்தின் விதிகளின்படியே தெரிவாவர்.

புதிய பாராளுமன்ற அமர்வின் போது இந்தப் புதிய நடைமுறையிலான மொத்தம் 225 உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாக இருப்பார்கள்.

மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு, மக்கள் அபிலாஷைகளைத் துரிதமாக நிறைவேற்ற உதவும் என்பதில் அரசு நம்பிக்கை கொண்டதாலும், ஜனநாயக முறையில் அதிகாரங்கள் மக்களிடமே என்பதனைச் செயல்படுத்தும் நட

(5-ம் பக்கம் பார்க்க)

# முதலில் பூரண யுத்தநிறுத்தம்; பின்னரே சமரசப் பேச்சு!

(சென்னை) இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியையும், இந்திய வெளியுறவு அமைச்சு உயர் அதிகாரிகளையும் நாளை புதுடில்லியில் சந்திக்கும் இலங்கைத் தமிழ்த் தீவிரவாதத் தலைவர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் இலங்கை ஆயுதப்படையினரின் யுத்தநிறுத்த மீறல்கள் குறித்தும் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது பற்றியும் கடும் ஆட்சேபனை தெரிவிப்பதுடன் எட்டு அம்சங்கள் கொண்ட கோரிக்கைகளையும் சமர்ப்பிப்பார்கள்.

அமைச்சர் எஸ். தொண்டமானை மேற்படி குழுவினர் இன்று சென்னையில் சந்தித்து தமிழ்ப்பகுதிகளில் புதிதாகத் தலைதூக்கியிருக்கும் வன்செயல்களை, அத்துமீறல்கள் குறித்து விரிவாக ஆராய்வார்கள்.

தமிழ்க் குழுக்களின் தலைவர்கள் திங்கட்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைச் சந்திப்பார்கள்.

இலங்கையில் போர்நிறுத்தம் சரியானமுறையில் செயல்

(5ம் பக்கம் பார்க்க)

### 4 லட்சம் ரூபா வசூல்

(சென்னை) இலங்கைத் தமிழர் நலவாழ்வு நிதிக்கென இதுவரை பசும்பொன்முத்து ராமலிங்க தேவர் மாவட்டத்தில் நான்கு லட்சம் ரூபாவுக்கு மேலாக

(8-ம் பக்கம் பார்க்க)

## 107 குடும்பங்கள் யாழ். வந்தது

(யாழ்ப்பாணம்) திருகோணமலை நிலாவெளி 10ம் குறிச்சியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டவர்களில் இதுவரை 107 குடும்பங்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளன.

கடந்த செப்டம்பர் மாதம் 8ம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் 3ம் திகதி வரை வந்த அகதிகள் குடும்பங்களே மேற் குறிப்பிட்டவையாகும்.

இக்குடும்பங்கள் வல்வெட்டித்துறை, பொலிகண்டி, ஆனைக்கோட்டை, தாளையடி, பருத்தித்துறை முனையடி, நாகர்கோயில், நவாலி ஆகிய இடங்களில் தங்கியிருக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

(5ம் பக்கம் பார்க்க)

## கான்ஸ்டபிளும் மனைவியும் கடத்தப்பட்டனர்!

[மட்டக்களப்பு] பொலிஸ் கான்ஸ்டபிளும் அவரது மனைவியும் இனந்தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்! மட்டக்களப்பு பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த இவரும்,

(8-ம் பக்கம் பார்க்க)

### கி. பி. போகுவரத்துச்சபை அலுவலகம் குண்டுவெடிப்பில் சேதம்!

(மட்டக்களப்பு) கல்முனையில் அமைந்துள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிழக்குப் பிராந்திய அலுவலகத்தின் இரண்டு மாடிக் கட்டடம் குண்டு வைத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளது!

நேற்று அதிகாலை 4மணியளவில் இனந்தெரியாத இளைஞர்களினால் கட்டடம் சேதமாக்கப்பட்டது. இதனால் கட்டடத்தின் முன்பகுதி சேதமடைந்தது

இதனைத் தொடர்ந்து இப்

[5-ம் பக்கம் பார்க்க]

### லொறிச்சேவை மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்) இடைநிறுத்தப்பட்டிருந்த யாழ்ப்பாணம்-கொழும்பு லொறிச்சேவை இன்று முதல் மீண்டும் நடைபெறும் என்று யாழ். தூர சேவை லொறிப் போக்குவரத் உரிமையாளர் சங்க அமைப்புக்குழுச் செயலாளர் ஜனாப் எஸ் ஏ இ.

(5ம் பக்கம் பார்க்க)

## நேற்று பூரண கடையடைப்பு

[யாழ்ப்பாணம்] ஆள், வாகனக் கடத்தல், கொலைகளை ஆட்சேபித்து நேற்று யாழ்ப்பாணத்தில் பூரண கடையடைப்பு நடைபெற்றது. நடைபாதை கடைகள்கூட பூட்டப்பட்டிருந்தன.

ஆள், வாகனக் கடத்தல், கொலைகளை ஆட்சேபித்து கடைகளைப் பூட்டி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி யாழ்ப்பாணத்திலுள்ள ஏழு முஸ்லிம் இயக்கங்கள் வேண்டுகோள் விடுத்திருந்தன. கடைகளைப்பூட்டி ஒத்துழைப்புவழங்குமாறு யாழ் வர்த்தக சங்கத்தினரும் தெரிவித்திருந்தனர்.

வீதிகள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டன. பஸ்

(5-ம் பக்கம் பார்க்க)

## 13 விவசாயிகள் படுகொலை

யாழ்ப்பாணம்) விசுவமடுவில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தில் படித்த வாலிபர் விவசாயத் திட்டத்தில் மட்டும் பதின்மூன்று விவசாயிகள் கொல்லப்பட்டதாகத் தெரியவந்துள்ளது

கொல்லப்பட்டவர்களுள் அச்சுவேலியைச் சேர்ந்த திரு

(5-ம் பக்கம் பார்க்க)

## இராமநாதன் விடுதலை

[கா. யோகநாதன்] "என்னைக் கடத்திச்செல்லப்பட்ட நாள் முதல் என்னை அன்பாகக்கவனித்து, ஆதரித்து நன்முறைப் பார்த்தார்கள் இதற்காக அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன்"

கடந்த மாதம் 18ம் திகதி கடத்திச் செல்லப்பட்ட விடியோ பிரசாத் நிர்வாகி திரு. எஸ் இராமநாதனை நேற்று அவரின் சகோதரி வீட்டில் சந்தித்தபோது மேற்

(5-ம் பக்கம் பார்க்க)

## ரூ. 20 லட்சம் நகை; ரூ. 10லட்சம் ரொக்கம் நல்லூரில் நள்ளிரவில் கொள்ளை!

(யாழ்ப்பாணம்) யாழ் நகரில் நேற்று முன்தினம் நள்ளிரவு அருகருகே உள்ள இரு வீடுகளில் சுமார் இருபது லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் சுமார் பத்து லட்சம் ரூபா ரொக்கப் பணமும் துப்பாக்கி ஏந்திய சுமார் 25 பேரினால் கொள்ளை யடிக்கப்பட்டுள்ளன.

யாழ். ஆஸ்பத்திரி ஒன்றுக்குச் சொந்தமான வாள் ஒன்றி வந்த மேற்படி நபர்கள் வீட்டில் உள்ள 15 பேரின்

(5-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வேலணை மேற்கு வெள்ளைப் பிட்டியில் வீடு கட்ட உகந்த பதின்மூன்றரை நெல் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விளம்பர இல: 1068. மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1068

அண்மையில் வெளியிலிருந்து கொண்டுவரப்பட்ட Hitachi Portable Component System, Model TRK - 9011 E விற்பனைக்குண்டு தொடர்பு: வி. சின்னத்துரை, கழாவடி லேன் ஆனைக்கோட்டை. 1038

எம்மிடம் வெற்றுச் சாக்குகள், பொலித்தீன் உறைகள் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும் பொதுமுகாமையாளர். நல்லூர்த் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு. கோப்பாய். 1058

புதிய தஞ்சாவூர் வீணை விற்பனைக்கு உண்டு தொடர்பு: மங்களபதி வைத்தியசாலை, பண்டாரக்குள பிள்ளையார் கோவிலடி, அரசவீதி, நல்லூர். 1061

மானிப்பாய் தபாற் கந்தோருக்கு அருகாமையில் பிரதான வீதி ஓரமாக 2 பரப்புச் சதுரவடிவமான வீடு கட்டக் கூடிய காணி விற்பனைக்குண்டு தொடர்பு: T விஸ்வநாதன், மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். 1030

## விற்பனைக்கு

ஆனைக்கோட்டை ஆறுகால் மடம், அரசடி வீதியில் இரண்டு பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரான்லி கல்டீன், 148/2, ஸ்ரான்லிரோட், யாழ்ப்பாணம். 1067

மாநகரசபை எல்லைக்குள் 2 பரப்பு காணியில் சகல வசதிகளுமுள்ள வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: த. தனபாலசிங்கம், 10, சின்னக் கண்டு ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம் அல்லது எஸ் குணராசா, கைலாசபிள்ளையார் கோவில், 298, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1071

புதிய 125 Honda மற்றும் மோட்டார் சைக்கிள்கள், 20'' 26'' கலர் T. V., டெக், காஸ் அவுண் குக்கர், 7 Sri, 2 Sri வோக்ஸ்வகன், லைஏஸ், பைலட் இன்ஸ்ரிடியூட், (நாயன்மார்கட்டு சந்தி), 151, செம்மணி ரோட், நல்லூர். 107

புத்தம் புதிய National NV 870 EN டெக் ஒன்று விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்க: குணம் வீடியோ சென்ரர், 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23665

(1008)

## வேண்டுகோள்

தாவடியில் ஆகஸ்ட் மாதம் 30-ம் திகதி இரவு 01-30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் எனது 'Honda' CD 200 மோட்டார் சைக்கிள் இல: 83 ஸ்ரீ 5164 எடுத்துச் செல்லப்பட்டது. அடுத்த நாள் திருப்பித் தருவதாகக் கூறியும், இந்நாள்வரை எதுவித தகவலுமில்லை.

அன்றாட எனது கடமைகளை நிறைவேற்ற இயலாது கஷ்டப்படுவதால் சம்பந்தப்பட்டவர்கள் மனிதாபிமான அடிப்படையில் கருணைகூர்ந்து சைக்கிளை திருப்பி ஒப்படைக்குமாறு தயவாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இ. சண்முகரட்ணம்.

பிள்ளையார் கோவிலடி, தாவடி.

1069

## 31ம் நாள் கண்ணீர் அஞ்சலி
### அல்பேர்ட் ரகுநாதன்

அன்னை மடியில்:
20-07-1960



கொடியவர் பிடியில்:
05-09-1985

தன்னகர் சென்று தாய் வீடு திரும்புகையில் பாதி வழியினிலே பாதகர் கையில் சிக்குண்டாய்! உன் உயிர்க்கு ஊறுதான் நடந்ததோ சதிகாரக் கும்பல் உன்னை எத்தனை சித்திரவதை செய்ததோ நாமறியோம் எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மின்னலென மறைந்துவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பிமார்.

இலுப்பை வீதி, பண்டத்தரிப்பு. 1040

## கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி உதயதாரகை கல்விச்சேவை ஆதரவில் இன்று காலை மன்றக்கட்டிடத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

க. பொ. த சாதாரண பரீட்சையில் விடைகளிக்கும் போது ஏற்படும் தவறுகளும் அவற்றை நிர்வகிக்கும் வழிகளும் என்ற பொருள் பற்றி இக் கருத்தரங்கு நடைபெறும்.

## சேவை

சீதனம் எதிர்பார்க்காத ஆண்கள், வசதியற்ற பெண்கள், விதவைகள், பிரிந்திருப்போர் துணைவரை அடைந்திட போட்டோ, முத்திரைக் கவருடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 1057, C/O, ஈழநாடு யாழ்ப்பாணம். 1057

## மணப்பந்தல்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 8-ல் செவ்வாயுள்ள படித்த மணமகனுக்கு (A/L) படித்த அழகுள்ள, நற்பண்புகளுமுடைய 23-30 வயதுக்குட்பட்ட வெளிநாடு செல்ல விரும்பும் மணப்பெண் விருப்பத்தக்கது. முதல் கடிதத்திலே குறிப்பிடனும் எல்லா முழு விபரங்களுடனும் கூடிய விரைவில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1065, C/o, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1065

## கல்வி

யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தரம் 6 (ஆண்டு 7) இல் அனுமதி பெற விண்ணப்ப முடிவு 10-10-85. பரீட்சை 23-11-85 10 கடந்தகால வினாத் தாள்களும், 30 தமிழ்க் கட்டுரைகளும் கொண்ட பரீட்சைத் துணை நூல். ரூபா 12-50. கிடைக்குமிடங்கள்: ஸ்ரீலங்கா, பூபாலசிங்கம், ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலைகள். 1076

## தேவை

தற்கால சூழலை மையமாகக் கொண்டு விரைவில் யாழ்ப்பாணத்தில் தயாராகவிருக்கும் திரைப்படத்துக்கு நடிகர், நடிகைகள் தேவை. புகைப்படத்துடன் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1073, மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 1073

## வகுப்புகள்

பிற்மன் தமிழ், ஆங்கிலதட்டச்சு, சுருக்கெழுத்து, Spoken English, Book-Keeping, A/L 86/87. நடைபெறும் இடங்கள், ஆரம்பம்: 10-10-85 J E C. (மேல்மாடி), சாந்தி சினிமா முன்பாக, யாழ்ப்பாணம். பிறியன் அக்கடமி, (1) பிரதான வீதி, பருத்தித்துறை, (2) மஹாத்மா வீதி, நெல்லியடி, (3 வதிரிச்சந்திக் கருகில், வதிரி. 1005

## எமது புதிய வெளியீடு

I. எரிமலை (Pyramid Original)
தியாகராஜன் — அம்பிகா

II. இளமை (Pyramid Original)
அனந்பாபு — ஜீவிதா

III. நீதியின் நிழல் (Pyramid Original)
சிவாஜி - சுஜாதா

IV. அண்ணி (Pyramid Original)
மோகன் — சரிதா

V. இதயகோவில் (Camera)
மோகன் - ராதா

மற்றும் வேறு புதிய வெளியீடுகள்

**நல்லூர் வீடியோ சென்ரர்**

முத்திரச் சந்தை — நல்லூர்

(1075)

## COMMERCE CENTRE

திருநெல்வேலி (அம்மன் கோவில் முன்)
ஆடியபாதம் வீதி

### 86, 87 A/L

★ பொருளியல் —
திரு. சின்னத்தம்பி, B A.
சனி, ஞாயிறு காலை 6-30 — 7-30 மணி.

★ வர்த்தகம் —
திரு. ஜெயராம், B COM
சனி, ஞாயிறு மாலை 3-00 — 4-00 மணி.

★ கணக்கியல் —
திரு. வன்னியசிங்கம், B A.
திங்கள், புதன் மாலை 4-00 — 5-00 மணி.

★ அளவையியல் —
திரு S S. மனோகரன், B COM
சனி, ஞாயிறு மாலை 4-00 — 5-00 மணி.
'குறியீட்டு அளவையியல்' 6-10 85ல்

★ இந்துநாகரீகம்:
அருள்நங்கை B A.

ஆரம்பம்: செவ்வாய் காலை 6-30 மணி

குறிப்பு:
★ சொற்ப மாணவர்களுக்கே இன்னும் அனுமதியுண்டு. ★ ஒவ்வோர் மாணவர் மீதும் விசேட கவனம் செலுத்தப்படும். ★ பாதுகாப்பான இடம். ★ மேலதிக வகுப்புகளும் உண்டு.

(1048)

## உங்கள் தேவை? எங்கள் சேவை! சமுத்திரா

### காணி வீடு விற்பனைக்கு

1. மானிப்பாயில் வங்கி, சந்தை, பாடசாலைகளுக்குச் சமீபமாகப் பிரதான வீதிக்கண்மையில் 2 பரப்புடன் வீடு, வளவு விற்பனைக்கு உண்டு.
2. மயிலங்காடு (ஏழாலை)ப் பகுதியில் 27 பரப்பு தொழிற்சாலை அமைப்பதற்கான சற்சதுரமான காணி உடன் விற்பனைக்கு உண்டு

### திருமண சேவை

எம்மிடம் சகல தரத்திலும் டாக்டர்கள், எஞ்சினியர்கள், எக்கவுண்டன்ஸ், ஆசிரியர்கள், வங்கி ஊழியர்கள், வர்த்தகர்கள், அரச கூட்டுத்தாபன ஊழியர்கள் தாரமிழந்தோர், விதவைகள், விவாக ரத்துச் செய்தோர், வயது முதிர்ந்தோர் (ஆண் பெண் இருபாலாரும்) ஆகியவர்கள் உண்டு நேரிலோ கடித மூலமோ தொடர்பு கொள்ளவும்.

### சிறு சேவைகள்

1. மங்கள காரியங்களுக்கான ★ உள்நாட்டு வெளிநாட்டு சிற்றுண்டி வகைகள், ★ வர்ணக் கேக்குகள் வகை வகையாக முன் ஆடருக்கு செய்து தரப்படும்.
2. வண்ண உடைகள் சிறுவர் முதல் பெரியவர் வரை கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில் தைத்துத் தரப்படும்.

**சமுத்திரா மல்ரி சேவிசஸ்,**
303, பலாலி ரோட்,
கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.

(1066)

**மணிவாக்கு**

கெடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை.

— குறள்

# நமது நோக்கு

## றீகனின் 'நட்சத்திரப் போரும்' மித்தரோனின் அணுப் பரீட்சையும்

குடும்ப சமேதராக ஒருவர் விஜயம் மேற்கொள்வது இல்லறப்பண்பாடு மட்டுமல்ல, காரிய சித்திக்கும் உதவுமென்பது பொதுவான நம்பிக்கை.

சோவியத்தலைவர் தமது மனைவியுடன் இன்றுபிரான்சுக்கு விஜயஞ் செய்திருப்பது ஒரு அபூர்வமான செய்தியென்று கொள்ளப்படுகிறது.

முன்பு சோவியத்தலைவர்கள் தமது வெளிநாட்டுப் பயணங்களில் இவ்வாறு நடப்பதில்லையென்பதே இந்தப் புதுமையின் ரகசியம்.

மேற்கத்தியதலைவர்களைப் போல் அவ்வாறு நடப்பதற்கு பழைய சோவியத் தலைவர்களுக்கு அவகாசம் கிடைத்திருக்கவில்லை. வீட்டிலும் நாட்டிலும் சரிநிகர் சமானமாக உழைக்கும் கர்மவீரர் ஆண் என்ன பெண் என்ன இவ்வித பயணங்களில் பலன் கண்டதில்லை.

என்றும் புரட்சியென்ற கொள்கை மனித இயற்கைக்கு மாறுபட்டது. இன்று மாஸ்கோ நகரம் உலகின் பெருநகரங்களில் ஒன்றாக சர்வதேசப் புகழ் பெற்றிருக்கிறது. கிறெம்ளின் ஆட்சியாளர் தமது வெளிநாட்டு பயணத்தில் மனைவிமாரின் உதவி தேவைப்பட்டால் அவர்களைக் கூட்டிச் செல்வதில் என்ன தயக்கம்? அதில் என்ன புதுமை?

பாரிஸில் கொர்பச்சோவ் நிகழ்த்திய உரை அமெரிக்காவின் 'நட்சத்திரப்போர்' திட்டத்தை ஐரோப்பிய நாடுகள் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டுமென்பதே! பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரோனை வீடு சென்று சந்திப்பது தவிர்க்கமுடியாமற் போய்விட்டது.

ஏன் அந்தத் தர்மசங்கடம்?

'சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம்' என்ற இலட்சியங்களுக்குப் பேர் போன பிரெஞ்சு மக்களின் தலைவர் - ஜனாதிபதி உண்மையில் ஒரு அரசன் என்பது பலருக்குத்தெரியாது.

பண்டைய மரபைப்புறப்பித்த ஜனாதிபதி டிகோலின் இந்த முடிசூடா மன்னராட்சி பிரான்ஸில் இலகுவில் மடிந்துவிடாது. ஜனநாயக 'அவர்' சோஷலிச 'இவர்', 'எவர்' ஜனாதிபதியானாலும் இந்த மன்னராட்சி முறை 'எலிஸிமாளிகை'யிலிருந்து இலகுவில் நீங்காது.

எனவே இன்று 'வாட்டர்கேட்' நிக்ஸனைப் போல், 'றீன்பீஸ்' மித்தரோன் என்ற இழிவு சிறப்புக்கு ஆளான பிரெஞ்சு ஜனாதிபதி, 'நட்சத்திரப் போர்' பற்றி றீகன் நடத்தும் மாநாட்டுக்கு வாஷிங்டன் செல்ல மறுத்துவிட்டார்.

இன்று விண்வெளிப் போரை எதிர்க்கும் மாநாடு ஒன்று மாஸ்கோவில் கூடினால் அங்கு ஜனாதிபதி மித்தரோன் செல்ல முடியாதென்பதும் தெளிவாகும்.

எனவே மகமட் மலைக்குச் சென்றது போல் கோர்பச்சோவ் பாரிஸ் வந்திருக்கிறார். மனைவியின் சந்நிதானமும் சூழ் நிலையைச் சுமுகமாக்குமென நினைத்திருக்கலாம்.

நடந்ததென்ன, 'கிறீன் பீஸ்' மித்தரோன் ரஷ்ய தலைவரின் கோரிக்கைக்கு கைச்சாத்திட மறுத்து விட்டார்.

இந்தியாவைப் போல் அணிசேராக் கொள்கையில் நம்பிக்கை கொண்டிருக்கிறாரா? இல்லவே இல்லை!

இங்கிலாந்து தன் பழம் பெருமையை நிலைநாட்ட போக்லண்ட் யுத்தம் ஒன்றை உருவாக்கியது போல், வியட்னாமில் தரைதட்டிய அமெரிக்கா அந்த வடுவை நீக்க கிறனடாவில் ஒரு போரை உற்பத்தி செய்து வெற்றி என்ற கோஷம் கிளப்பியது போல், பிரான்சும் தனது பண்டைய ராணுவப் பெருமையைக் கைவிடாது' வல்லரசு என்ற பெருமைக்கு முயற்சிக்கிறது.

அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் பிரான்சுக்கு நம்பிக்கை எவ்வாறு ஏற்படும்? 1689 தொடக்கம் 1815 வரைக்கும் நடந்த எட்டு யுத்தங்கள்; இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே நடந்தன. அமெரிக்க ஆதிக்கம் எத்தகையதென்பதை பிரான்ஸ் இரண்டாவது உலக யுத்தத்தில் உணர்ந்தது.

இன்று அவற்றை மறந்தாலும் பிரிட்டிஷ் கால்வாய் பிரிக்கும் இவ்விரு நாடுகளும் இயல்பாகவே மாறுபட்டவை. பிரெஞ்சுப் பிரபுத்துவம் நாட்டில் நிலைத்திருக்கும் அடிப்படைக் கொள்கை ஆகும்.

இன்றைய யுத்த ஆயுதப் போட்டியில், அமெரிக்காவையும் அதன் கூட்டாளி இங்கிலாந்தையும் பிரான்சு எள்ளளவும் நம்பவில்லை.

ஜெர்மனியுடன் உறவு கொண்டு அமெரிக்காவுக்கு முட்டுக்கட்டை போட பிரான்சு முயன்றபோதும் ரஷ்ய உதவியை நாடவில்லை.

பழைய பகைமை இலகுவில் மாறுவதில்லையென்பதும் தம்முடைய உடனடித் தேவைக்கு ஏற்ற உதவியை எவரிடமும் பெறுவதும் இன்றைய வல்லரசுகளின் கில்லறை ராஜதந்திரம்.

### ஹோமியோபதி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஹோமியோபதி டாக்டர்களின் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் நாவலர்வீதி ஐந்து சந்தியிலுள்ள ஹோமியோபதி சங்கத்தலைவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. ஹோமியோபதி டாக்டர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர். (ச)

# பேச்சுவார்த்தைகள் தொடர்பாக

# தயக்கங்களும் நிலைப்பாடுகளும்

['இந்து' பத்திரிகையின் அரசியல்விமர்சகர் திரு. கே. ஜி. ரெட்டி அண்மையில் எழுதியுள்ள அர்த்தமுள்ள கட்டுரையொன்றின் முக்கிய சில பகுதிகளை இங்கு தருகின்றோம்.]

தமிழில்: — பி. எஸ். பி.

தனது அரசியல் அல்லது சமூக இலட்சியத்தை ஆயுதப் போராட்டத்தின் மூலம் சாதிக்கலாம் என நம்புகின்ற ஒரு தீவிரவாத இயக்கமானது பாதகமான சூழ்நிலைகள் திரும்பியிருந்தாலன்றி தனது அடிப்படை கொள்கைகளின் மீது பேரம் பேசி பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண்பது என்பதில் அக்கறைகாட்ட மாட்டாது.

ஒரு நோக்கத்தை அடைவதற்கான முழுமையான போராட்டத்தின் இடை நடுவில் அதனைக்கைவிடுவதென்பது அவ்வியக்கத்தைப் பொறுத்தவரை சகல நடைமுறை விடயங்களிலுமே மேற்கொள்ளப்பட வேண்டிய புரட்சிகர பாதையினை கைவிட்டு சரணடைவதாகவே அமைந்துவிடும்.

அனுகூலமற்ற நிலைமைகளிலும் போராட்டத்தை தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கும் போது விட்டுக்கொடுக்க முடியாத ஒன்றின் மீது இணக்கம் ஏற்படமுடியாதெனில் பெரும் இழப்புகளை எதிர்நோக்க நேர்ந்த போதிலும் புரட்சிகர போராட்டத்தை முன்னெடுக்க முனைப்புடன் நடத்துவதே அவ்வியக்கத்துக்குள்ள ஒரே வழி.

அவ்வாறான ஜீவமரண போராட்டத்தில் ஒரு தளர்வு அல்லது விலகிச் செல்வது போன்ற அறிகுறிகள் தென்படுமானால் இயக்கத்தின் பொது உறுப்பினர் மத்தியில் பெரும் ஒழுங்கீனத்தை அது தோற்றுவிப்பதுடன் மோசமான பின் விளைவுகளையும் ஏற்படுத்தும்.

### இருதலைக்கொள்ளி எறும்பின் நிலை

இலங்கை அதிகாரவர்க்கத்தின் கொடுங்கோன்மைக்கு எதிராக வீரமிக்க போராட்டத்தில் இறங்கியுள்ள பல்வேறு தமிழ்ஈழ அமைப்புகளும் இப்போது இப்படியான ஒரு இருதலைக்கொள்ளி எறும்பின் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு இந்தியா விடுத்துள்ள அழைப்பினை ஒத்துக்கொள்வதா அல்லது தனிநாடு காண்பதற்காக நடத்திவரும் போராட்டத்தை முன்னெடுக்க தீவிரமாக தொடர்ந்து நடத்துவதா என்றநிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழ் தீவிரவாதத் தலைவர்கள் இன்னமும் இந்திய மண்ணில் இருந்து கொண்டு அதன் வசதிகளையெல்லாம் தமது இயக்கத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டும் இருக்கும் அதேவேளையில் நல் நோக்கத்துடன் இந்தியா தெரிவிக்கும் யோசனைகளைப் புறக்கணித்துவிட முடியாதநிலை. அதேசமயம் இலங்கை அரசாங்கத்தினால் நம்பத்தகுந்த விதத்தில் எதுவும் வெளியிடப்படாத நிலையில் தங்களின் சக தீவிரவாதிகளினாலேயே அவரும் கடதாசிப் புலிகள் என்று ஏளனம் செய்யப்பட வேண்டிய நிலைக்கும் தம்மை உட்படுத்திக் கொள்ள முடியாது.

மிதவாதத் தலைவர்கள்-தேசபக்தியில் இவர்கள் தீவிரவாதிகளிலும் குறைந்தவர்களல்லர்- இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவும் அவரது ஆலோசகர்களும் ஒரு கௌரவமான தீர்வினைக்காண்பதில் உண்மையாகவே ஆவல் கொண்டிருக்கிறார்களா என்பதை அறியும் வகையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் தவறொன்றுமில்லையென்று கருதுகிறார்கள்.

இலங்கையின் அரசமைப்புக்குள்ளேயே போதுமான அளவு அதிகாரப்பங்கீட்டுடன் தங்கள் சமூகம் பூரணபாதுகாப்புடன் வாழ்வதற்கு வகை செய்வதான நியாயமான அளவில் சுயாட்சியொன்றை தமிழ் பேசும் பிரதேசங்களுக்கு பெற்றுக் கொள்ள முடியுமானால் தமிழ் மக்கள்மீது சொல்லொணாத்துன்பங்களை சுமத்தும் ஆயுதப்போராட்டத்தை அதன் கடைசிவரை நடத்த வேண்டிய அவசியமில்லை என்பது அவர்களின் கருத்து.

ஆனால் மித மிஞ்சிய நிர்வாக அதிகாரங்களை வைத்துக் கொண்டுள்ள இலங்கை

### கருத்து வேறுபாடு

ஜனாதிபதியானவர் வடக்கு கிழக்கு பிராந்திய செயற்பாடுகளில் தலையிடவும் அதிகாரத்தைத் திணிக்கவும் உள்ள அதிகாரங்களை தம்மிடமே வைத்துக் கொள்வதாயின் நியாயமான ஒரு தீர்வு ஏற்படக்கூடும் என்பதில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் பலத்த கருத்துவேறுபாடு நிலவுகின்றது.

அப்படியான ஒரு நிலைமையைத் தவிர்க்கும்வகையில் பொதுசனக் கருத்துக் கணிப்பு ஒன்றை நாடாமலே ஜனாதிபதியின் அதிகாரங்களை அரசியல் அமைப்புத் திருத்தங்கள் மூலம் எந்த அளவுக்குக் கட்டுப்படுத்தமுடியும் என்பது விவாதத்துக்குரிய விடயம்.

மெதுவான நிர்ப்பந்தங்கள், நட்பு முறையிலான தூண்டுதல்கள் மூலம் திம்பு பேச்சுக்களுக்கு இருதரப்பினரையும் வரும்படி செய்ததின்மூலம் ஏதாகிலும் திருப்பம் உருவாகும் என இந்தியா கருதியது. துரதிருஷ்டவசமாக கருத்து வேறுபாடுகள் நீடிக்கவே செய்தன. இதனால் இணக்கமான ஒரு மாற்றுயோசனையை அவர்களால் முன்வைக்க முடியவில்லை. ஆக, தமது அடிப்படை நான்கு கொள்கைகளில் நம்பிக்கை தெரிவித்து கூட்டு அறிக்கையொன்றை விடுக்கவும், போர் நிறுத்தத்தை மீறி இலங்கை அரசாங்கம் அப்பாவித் தமிழர்கள் மீது அட்டூழியம் புரிவதாகக்கூறி வெளிநடப்புச் செய்யவும் மட்டுமே முடிந்தது.

### இந்தியப் பிரதமரின் நிலைப்பாடு

அண்டை நாடுகளுடனான உறவுகளை வளர்த்துக்கொள்வதில் ஆர்வம் கொண்டுள்ளவரான இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கையை முற்றாக ஆதரிக்கவில்லை என்பதை இரகசியமாக வைத்திருக்கவில்லை. சுதந்திர ஈழம் அமைக்கப்படுவதற்கு எதிராகமட்டுமன்றி இலங்கையின் ஒற்றையாட்சியின் வரம்புகளைக் கடந்த செல்லும் சமஷ்டி அமைப்பையும்கூட அவர் எதிர்த்துப் பேசியிருக்கிறார். இந்தியாவில் செயல்படும் மாநில அமைப்புப் போன்ற சுயாட்சி முறையானது தமிழர்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளை நிறைவேற்றப் போதுமானது என அவர் கருதுகின்றார்.

இந்தக் கொள்கையை அடிப்படையாகவைத்துக்கொண்டே தமிழ்ப் பகுதிகளுக்கான உத்தேச சுயாட்சி அமைப்பில் தமிழ்ப் பகுதிகளுக்கு கூடிய அளவில் சலுகைகளை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் இந்திய அதிகாரிகள் தீவிர பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்துள்ளனர். ஆனால் இலங்கை ஜனாதிபதியின் சகோதரர் திரு. ஹெக்டர் ஜயவர்த்தனாவுடன் நீண்டபேச்சுக்கள் நடத்தி உருவாக்கப்பட்ட செயல்திட்ட அறிக்கையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளில் தாம் கலந்துகொள்வதானால், தமது தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிட நேர்வதுடன் அதனை அடைவதற்கான ஆயுதப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான உரிமையையும் கைவிட தாங்கள் தயாராய் இருப்பதாகவே கருதப்படும் என்று தீவிரவாதிகள் கருதுகிறார்கள். இந்தச் சங்கடமான நிலைமையினாலேயே இந்திய அரசு மீண்டும் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி கோரியும் கூட தீவிரவாதிகள் மிகுந்த தயக்கம் காட்டி வந்துள்ளார்கள்.

(5ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

### ஒலிபெருக்கித் தொல்லை

இவ்விடமாக திரு. க. வேலுப்பிள்ளை அவர்கள் எழுதி 1- 10- 85 ல் தங்கள் மதிப்பிற்குரிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டவை அமைதி விரும்பும் யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடியவை. கிழக்கிலும் வடக்கிலும் கொலைகளும், கொள்ளைகளும், தீயிடுதலும், ஆட்கடத்தலும் மலிந்து மக்கள் அவலக்குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் வேளையில் ஒலிபெருக்கிகள் மூலம் மக்கள் அமைதியைக் குலைப்பது வேதனைக்குரியது. கோவில்களில் கூட ஒலிபெருக்கி தேவையில்லை. குருக்கள் ஒலிபெருக்கியில் மந்திரங்களைச் சொல்லி அவர்களின் புனிதத் தன்மையைக் கெடுக்கலாமா?

முன்பெல்லாம் ஒலிபெருக்கி பாவிக்க காவல்துறை அனுமதி வேண்டும் இப்போ யாரும் எதையும் செய்யலாம். ஆனால் ஒலிபெருக்கி போன்ற வேதனைகளைத் தவிர்த்துக்கொள்ளுமாறு வேட்டுக்கொள்கிறேன்.

சதா ஸ்ரீநிவாசன்,
உடுவில்.

# ரூபவாஹினி

மாலை

5-00 செய்திகள்
5-05 'கார்ட்டூன் நிகழ்ச்சி'
5-10 'உடலை அறிந்திருங்கள்'
5-30 "ரோட்டு வெம்பிளி"
6-30 செய்திகள் (தமிழ்)
7-00 தடைம் டனல் (ஆங்கிலம்)
8-00 செய்திகள் (சிங்களம்)
8-25 சிங்கள நாடகம்
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-25 சங்கபத்மா
9-50 மிஸ் ஸ்ரீலங்கா 85
11-05 ஒலிபரப்பு முடிவு

# ரூபா 20 லட்சம் நகை..!

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கண்களையும், வாயையும் கட்டிவிட்டு, இக்கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

வானில் வந்தவர்கள் இரு வீட்டினதும் முன்புறமாகவும் பின்புறமாகவும் மதிலால் பாய்ந்து உட்புகுந்தார்களாம்.

துப்பாக்கிகள், வாள்கள், பிஸ்கத்திகளுடன் வந்த இவர்கள் வீட்டிலிருந்த எல்லோரையும் ஒரே அறைக்குள் வைத்துப்பூட்டிவிட்டு கொள்ளையை நடத்தியுள்ளனர்.

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலருகே உள்ள நகை அடகு பிடிக்கும் சகோதரிகளான திருமதி பாக்கியம், திருமதி தங்கம்மா ஆகியவர்களின் வீட்டிலேயே இக்கொள்ளை நடந்தது.

துப்பாக்கி முனையில் இரும்புப் பெட்டிச்சாவியை எடுத்து வரச் செய்து பெட்டியைத் திறந்து அதனுள் இருந்த பதினைந்து லட்சம் பெறுமதியான நகைகளும், ரொக்கப் பணம் பத்து லட்சமும் எடுக்கப்பட்டதாம்.

கொள்ளையர் அங்கிருந்த பெண்கள் காதில் அணிந்திருந்த தோடுகளையும் கழற்றி விட்டதாகவும் பெண் பிள்ளைகள் கெஞ்சிக்கேட்டதால் அவர்கள் விட்டுச்சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வீட்டுக்காரப் பெண்ணின் கையில் இருந்த பவுண்காப்புகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

திருமதி தங்கம்மா வீட்டருகே உள்ள அவரது சகோதரி திருமதி பாக்கியம் வீட்டில் இக்கொள்ளைக்கோஷ்டியினர் தாலிக்கொடி, அட்டியல், சங்கிலி, காப்பு என்பனவற்றுடன் 13 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் எடுத்துள்ளனர். அங்கிருந்த மோட்டார் உதிரிப்பாகங்கள், றேடியோ, மணிக்கூடு என்பனவும் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளன. (ஐ)

## பிள்ளைகள்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகள் கையால் ஒருகுழி தோண்டி அந்தச் சடலத்தைப் போட்டு மூடிவிட்டுவந்தார்கள். நாங்கள் போகும் போது ஒரு கிணற்றடியில் இரண்டு சடலங்கள் கிடந்தன, எரித்துவிட்டு வந்தார்கள். மற்றொரு இடத்தில் 7 வேரைச் சுட்டு அரைகுறையாக எரித்திருந்தார்கள். வீட்டிலிருந்த அப்பாவிப்பிள்ளைகளை, தீவிரவாதிகள் என்று சொல்லி லொறிகளில் ஏற்றிக் கொண்டு போனார்கள் அவர்கள் நிலைமை தெரியவில்லை.

திருமலையில் நடந்ததுப்பாக்கிச் சூட்டின் போது மயிரிழையில் உயிர்தப்பிய இளைஞர் ஒருவர் தமக்கு ஏற்பட்ட இன்னல்களைக் கூறுகிறார்: நாங்கள் கஷ்டம் தாங்க ஏலாமல் கள்ளத்தில் தொழிலுக்குப்போனோம். பின் மார்கட்டுக்குப் மீன் கொடுக்கப் போனோம். மீன்களைக் கொடுத்துவிட்டு வரும்போது எல்லோரும் ஓடினார்கள். எங்களுக்கும் பயம் ஏற்பட்டுவிட்டது. கடற்கரையில் இருந்து பார்த்தோம். மார்க்கட்டில் சடலங்கள் காணப்பட்டன. பெண்கள் ஓடிவந்தார்கள் படகில் ஏறினார்கள். அப்போது வெளியூர்க்காரரின் ஒரு பெரிய படகு வந்தது சிறு படகுகளை நோக்கி சுட்டார்கள். ஒருபடகில் 5 பேர் போனார்கள் நாலு பேர் கடலுக்குள் பாய்ந்தார்கள். ஒருவர் கும்பிட்டார். கதறினார் அவருக்கும் சூடு விழுந்தது. மற்றொரு படகைக் கடப்பிட்டார்கள். அந்தநேரத்தில் நாங்கள் படகில் திரும்பி விட்டோம். எங்கள் படகும் சேதமடைந்தது. வள்ளம் வலை எல்லாவற்றையும் விட்டு விட்டு வந்தோம். நாங்கள் எப்படியும் இந்தியாவுக்கு போக வேண்டும் என்று ஆயத்தப்படுத்திக்கொண்டு இருக்கிறோம். கடலில் என்ன நடக்குமோ என்று சொல்ல முடியாது இந்தியாவிற்கு போகும் திட்டத்துடன்தான் இருக்கிறோம்.

(தொடரும்)

## தயக்கங்களும்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பூரணத்துவமான சுயாட்சியைத் தவிர்ந்த வேறு எதற்கும் சம்மதிக்க தீவிரவாதிகள் தயக்கம் காட்டுவது தொடர்பாக புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் தீவிரவாதிகளுக்கு அனுகூலமான ஒரு கருத்து நிலவுகின்றது. இலங்கை ஜனாதிபதியால் தயக்கத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட அதாவது தனது ஆயுதப்படைகளுக்கு ஆயுதம் வாங்கவும் அவைகளை விஸ்தரிக்கவும் அவகாசம் ஏற்படுத்திக் கொள்வதற்கும் ஆத்திரமுற்றிருந்த இந்திய அரப்பினரை சாந்தப்படுத்தவும் அவர் மேற்கொண்ட திட்டப்பாடு — மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சிக்கு மேலாக எதுவும் செய்ய அவர் தயாராய் இல்லாத பட்சத்தில் இந்தத் தீவிரவாதிகள் தமது அடிப்படை நிலைப்பாட்டினைக் கைகிவரை கடைப்பிடிப்பதற்கு அனுமதிப்பதில் தவறிருக்காது என மேற்படி புதுடில்லி வட்டாரங்களில் கருதுகிறார்கள்.

(தொடரும்)

## 1-வது நினைவஞ்சலி

திருமதி ஜெலி செல்லம்மா கதிர்காமநாதன்

(பேபி அக்கா)

அன்னையின் மடியில்: 23-12-1913

ஆண்டவன் அடியில்: 5-10-1984



அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அல்வாய் வடக்கு, அல்வாய். (1084)

## கொழும்பில் கடும்மழை

(கொழும்பு)

கொழும்பில் நேற்றுக் கடும் மழை பெய்தது.

கடும் காற்றுடன் கூடிய தொடர்ச்சியான பெரும் மழையினால் தாழ்வான பல பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

## நேற்று...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையம், நவீன மார்க்கட், ஸ்ரான்லி வீதி, கே. கே. எஸ். வீதி, பிரதான வீதி கஸ்தூரியார் வீதி, சகல கடைகளும் பூட்டப்பட்டிருந்தன.

அரச கூட்டுத்தாபனம், நீதிமன்றம், பாடசாலைகள், கச்சேரி, ஆஸ்பத்திரி வழக்கம் போல் நடைபெற்றன. (க)

## லொறிச்சேவை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மொபின் தெரிவித்தார்.

ஆள். வாகனக் கடத்தல்களுக்கு ஆட்சேபம் தெரிவித்து கடந்த மாதம் 30-ம் திகதிமுதல் யாழ்.—கொழும்பு லொறிச்சேவை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. நேற்றுச் சந்தித்த லொறி உரிமையாளர்கள் மீண்டும் இன்று சனிக்கிழமைமுதல் லொறிச் சேவையை நடத்துவதென முடிவுசெய்துள்ளனர்.

முக்கிய இயக்கங்கள் இனிமேல் இப்படியான சம்பவங்கள் நடைபெறுதென்று உறுதியளித்திருப்பதுடன், அப்படி ஏதாவது நடந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளதைத் தொடர்ந்து மீண்டும் லொறிச் சேவையை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (க)

## 13 விவசாயிகள்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சகோதரர்களான வல்லிபுரம் கணேசமூர்த்தி (29 வயது), விவேகானந்தன் (24 வயது) ஆகியோரும் அடங்குவர்.

அச்சுவேலியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை ஜெயசீலன் (25 வயது) என்பவர் படுகாயம் அடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருகிறார்.

வேலணையைச் சேர்ந்த நடுத்தர வயதுள்ள சிலர் மரமொன்றுடன் கட்டப்பட்டிருந்தனராயினும் பின்னர் வேறு சிலரால் கட்டவிழ்க்கப்பட்டு தப்பித்து தமது சொந்த ஊருக்குத் திரும்பியுள்ளனராம்.

கடந்த 2-ம் திகதி அங்கு ஆயுதப்படையினர் கிசுவமடு பிரமந்தனாறு விவசாயக் கிராமத்தைச் சுற்றிவளைத்துதாக்குதல் நடத்தியபோது 50க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதும் சிலர் படுகாயமுற்றதும் தெரிந்ததே. (மா)

## இராமநாதன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டவாறு தெரிவித்தார்.

கண்களைக் கட்டியபடியே தன்னைக் கொண்டுசென்றார்கள் என்றும், வீட்டு அறை ஒன்றில் வைத்திருந்தார்கள் என்றும், பற்பசை, பிரஷ், சோப், பவுடர், மாற்று உடைகள் தந்தார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தினமும் பத்திரிகைகள் வாசிக்கத்தந்தார்கள் என்றும், அவற்றில் தனது விடுதலைக்காக நடந்த ஹர்த்தால், கடையடைப்பு, ஊர்வலம், மறியல் பற்றி அறிந்துகொண்டதாகவும், இதற்காக சகல மக்களுக்கும் நன்றி தெரிவித்ததாகவும் கூறினார்.

நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு கடத்தப்பட்ட இடத்திலேயே தன்னைக் கொண்டு வந்து விட்டார்கள் என்றும், ஒரு விதமான பயமுறுத்தலும் செய்யவில்லை என்றும், அடிக்கடி வந்து 'ஏதாவதுதேவையா' என்று அன்புடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும் கூறினார். (கா)

## இப்படியும் நடக்கிறது

தொலைபேசி வழக்கப்போல அழைத்தது:

ஒரு குரல்: "... என்னய்யா... வடக்கிலையும் கிழக்கிலையும் மக்கள் தொடர்ந்து செத்துக் கொண்டிருக்கிறார்களே..."

அந்தக் குரல் தன்னை இனம்காட்டிக் கொள்ளாமல் தொடர்ந்தது:

"ரோமாபுரி எரிந்து கொண்டிருந்தபோது நீரோ மன்னன் பிடில் வாசித்த கதை மாதிரித்தான் இருக்கிறது..."

ரோமாபுரி எது...? நீரோ மன்னன் யார்...?

— வைரேன்

## முதலில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுவதற்கு ஏற்ற வழிவகைகள் காண்பதற்குமுன்பாக இலங்கை அரசுடன் ஈழதேசிய விடுதலை முன்னணியினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் ஏனைய இலங்கைத் தமிழ்த் தலைவர்களும் எந்தவிதப் பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என்று ஈழ தேசிய விடுதலை முன்னணியின் பிரதிநிதி ஒருவர் நேற்று சென்னையில் தெரிவித்தார்.

இந்த அமைப்புப் பிரதிநிதிகளுடன் நேற்றுச் சுமார் ஒரு மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே செய்தியாளர்களிடம் இவ்விபரங்களை அவர் தெரிவித்தார்.

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவது உடனடியாக நிறுத்தப்பட்டால்தான் அரசியல் தீர்வுக்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் அடிப்படை ஆலோசனைகள் குறித்து விவாதிக்கப்படுமென்றும் ஒருமனதான அனைவரும் முடிவெடுத்ததாகவும் அவர் கூறினார்.

இலங்கைத் தமிழர்கள் இராணுவத்தினரால் கொல்லப்படுவது உண்மையிலேயே இலங்கை அரசு, இலங்கை இனப்பிரச்னைக்கு நியாயமான அரசியல் தீர்வொன்றைக் காண உறுதியுடன் விரும்புகிறதா என்ற ஐயப்பாட்டை எல்லோர் மத்தியிலும் ஏற்படுத்தியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதுடில்லிக்கு இன்று இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் மற்றும் தீவிரவாதத் தமிழ்த் தலைவர்கள் புறப்படுவதாகவும் அங்கு வெளியுறவு அதிகாரிகளை சந்தித்து இலங்கையில் தற்போது நிலவும் நிலைமை குறித்து தங்களது கருத்துக்களைத் தெளிவுபடுத்தவிரும்புவதாகவும் அந்தப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

போர்நிறுத்தமீறல் எந்த வகையிலும் ஏற்படாதிருக்க வேண்டிய அவசியத்தை அவர்கள் அதிகாரிகளிடம் வற்புறுத்திக் கூறுவார்கள் என்றும் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

புதுடில்லியில் இந்திய அரசிடம் தமிழ்க் குழுக்கள் சமர்ப்பிக்கும் எட்டு அம்சக்கோரிக்கைகளில்; ★ ஊர்காவல்படையினரிடமிருந்து ஆயுதங்களை வாபஸ் பெறுதல் ★ ஆயுதப் படையினர், முகாமிலிருந்து வெளியேறத் தடைசெய்தல் ★ அரசின் ஆயுதக் கொள்வனவு ★ போர்நிறுத்தமீறல் பற்றிய கண்காணிப்புக்குழுவில் ஈழதேசிய விடுதலை முன்னணி சிபார்சுசெய்த இருபது பேரில் ஐந்துபேரையாவது சேர்ப்பது ★ பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்துச் செய்வது ★ தமிழ்ப்பகுதிகளில், திட்டமிட்ட குடியேற்றத்தை நிறுத்துவதுபோன்ற அம்சங்களும் அடங்கியுள்ளன.

## அரச கூட்டுத்தாபன—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செய்துள்ளார்.

அப்பஸ்ஸில் பிரயாணம் செய்யவிரும்புவோர் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு முன்பதாக யாழ். செயலக அலுவலக வாயில் முன்பாக ஒன்றுகூடி, மட்டக்களப்பு மாநகரசபையின் மின் பொறியியலாளர் திரு. எஸ். ஆனந்தமூர்த்தியை அடையாள அட்டைகளுடன் சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

பிரயாணம் செய்யும் திகதி நாளை தீர்மானிக்கப்படவேண்டியிருப்பதால் பயணக்கட்டணமாக 150 ரூபாவும் கொண்டுவரவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## குண்டு வெடிப்பு..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பகுதிகளில் பதற்றம் ஏற்பட்டது.

கல்முனை தபாலகம் இயங்கவில்லை வீதிப்போக்குவரத்தும் தடைசெய்யப்பட்டது.

## 107 குடும்ப..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போதிய நிவாரண உதவிகள் இன்றி இக்குடும்பங்கள் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## பாராளுமன்ற

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வடிக்கையாகவே 'பாராளுமன்ற அங்கத்தவர்களின் தொகை அதிகரிப்பு' முயற்சி அமைந்துள்ளது என்று பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.


# எம்மிடம் மீண்டும் ஒறிஜினல்

இளமை---ஆனந்பாபு, ஜீவிதா (பிரமிட்)

நீதியின் நிழல்---சிவாஜி, பிரபு, சுஜாதா (பிரமிட்), கிருவ்ரர், கமல், றஜனி, அமிர்தாபச்சன் (பிரமிட்)

நியூவிக்ரேஸ்

எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

யாழ்ப்பாணம். தொலைபேசி: 23532

(1085)

## உணவு முத்திரை
# விண்ணப்பங்கள்
## துரிதமாக விநியோகம்

(மாவிட்டபுரம்)

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உணவு முத்திரை விநியோக விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுவதுடன் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் குழுக்கள் அமைக்கும் வேலையும் துரிதமாக நடைபெற்று வருகிறது.

1979ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட உணவு முத்திரை திட்டம் தற்சமயம் உணவுத் திணைக்களத்தில் இருந்து சமூகசேவைப் பகுதிக்கு மாற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது

இப்புதிய முறைப்படி முன் உணவு முத்திரை பெற்றவர்களும் தற்சமயம் 700 ரூபாவுக்குட்பட்ட வருமானம் பெறுபவர்களும் விண்ணப்பிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு குடும்பத்தில் ஆகக் கூடியது 5 பேருக்கு மட்டுமே உணவு முத்திரை வழங்கப்படவிருக்கிறது வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு வந்து சேர்ந்த விண்ணப்பப்படிவங்களில் 'ஏ' விண்ணப்பம் தற்சமயம் கிராம சேவையாளர்களாக் விநியோகம் செய்யப்படுகிறது.

'ஏ' விண்ணப்பத்தை பெற்றவர்கள் அவை பூர்த்திசெய்து கையளித்ததும் 'பி' படிவம் வழங்கப்படும். அப்படிவம் 7 நாட்களுக்குள் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும். பின்னர் 'கிராமசேவையாளர் மட்டத்தில் அமைக்கப்படும் குழு இவற்றை பரிசீலனை செய்து தகுதியானவர்களுக்கு முத்திரை பெற சிபார்சு செய்யும்

இக்குழுவில் 3 அரச ஊழியர்களும், 2 பொதுஜன சமூக இயக்கங்களின் பிரதிநிதிகளும் அடங்குவார்கள். மேற்படி குழுவுக்கு கிராமசேவையாளர் செயலாளராக இருப்பார் வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. இ. இராசரத்தினம் இந்த வேலைகளை துரிதமாக செய்துவருகிறார்.

## "முதலுதவி சுகாதார நிலையங்கள் மக்களுக்குப் பயன் தருகின்றன"

(மாவிட்டபுரம்)

'கிராம மக்கள் சுகாதார வசதிகள் இன்றிப் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த நிலைமாறி இன்று கிராமங்கள் தோறும் சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு சுகாதார நல சேவைகள் விரிவுபடுத்தப் பட்டுள்ளன. இச்சுகாதார நிலையங்கள் மூலம் கிராம மக்கள் பெரிதும் பயன்பெற முடியுமாதலால் மக்கள் இவற்றை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்

இவ்வாறு மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய முதலுதவி சுகாதார நிலைய திறப்பு விழாவில் கலந்து அந்நிலையத்தை திறந்து வைத்துப் பேசிய காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு இ தெய்வேந்திரன் கூறினார்:

திருப்பூர் ஒன்றியத் தலைவர் திரு க தங்கலிங்கம் தலைமையில் நடந்த இவ்விழாவில் மேற்படி சுகாதார நிலையத்திற்கு மருந்து வகைகள் மற்றும் உபகரணங்கள் அடங்கிய பெட்டி ஒன்றையும் சுகாதார வைத்திய அதிகாரி கையளித்தார்.

தலைவர் தமதுரையில், மயிலிட்டிப் பகுதி மக்கள் கண்காணிப்பு வலயம், மற்றும் கெடுபிடிகளால் பொருளாதார நிலையில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையில் மக்களின் சுகாதார நிலை பேணும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இச்சுகாதார நிலையம் பெரிதும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது' என்றார்.

காங்கேசன்துறை சுகாதார பரிசோதகர் திரு. ரி. கனகதேவன், ஒன்றிய காப்பாளர் திரு. இ. வேலுமயிலும் உட்பட மற்றும் பலர் பேசினர்

## சனசமூக நிலைய பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் வடக்கு அம்மன் கோவிலடி சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் திரு கே சற்குணலிங்கம் உபதலைவர் திரு கே. சிவயோகநாதன், செயலாளர் திரு எஸ். கிருபேசன், உபசெயலாளர் திரு. வி. மகாலிங்கம், பொருளாளர் திரு எஸ். சோதிலிங்கம்; செயற்குழு உறுப்பினர் தெரிவும் இடம்பெற்றது. (ச)

## இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி
திகதி: 19 (5-10-1985)
கிழமை: சனி
திதி: ஷஷ்டி
நக்ஷத்திரம்: மிருகசீரிடம்

மேடம்: பொதுத் துறையில் நாட்டம் செல்லும். மக்களின் ஆதரவும் கிடைக்கும் அதன் மூலம் புதிய பாதையும் பிறக்கும்.

இடபம்: செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும் நண்பர்களே காலை வாரிவிடக்கூடும் வீண்பேச்சுக்கிடமளியாது பொறுமையுடன் இருக்கவும்.

மிதுனம்: மேலதிகாரிகளின் மோதலை தவிர்க்கவும் பொருள் தவறக்கூடும். உடல்நலமும் பாதிக்கப்படலாம் உணவு விடயத்திலும் கவனம் வேண்டும்.

கடகம்; கல்வித் துறையில் முன்னேற்றமுண்டு ஆசிரியர்கள் பாராட்டப்படுவார்கள். வாகன நலனுமுண்டு சுபநாள்

சிங்கம்: தூக்கம் விழிகளைத் தழுவமறுக்கும் எதிலும் அலட்சியமனப் பான்மை தோன்றும் சகோதர சஞ்சலமும் உண்டாம்

கன்னி: மனம்போல யாவும் நடக்கலாம். நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாகலாம். தாய்வழிப்பெருமையும் உண்டாம்

துலாம்; நேர் மூலப் பரீட்சைக்கு உகந்த தினம். புத்திரர் வழிச்சுகமும் உண்டு அன்னிய ராசமும் அன்னியர் உதவியும் கிட்டும்

விருச்சிகம்: தவறுகள் நடக்கலாம் இனபந்துக்களின் தொல்லைகளும் அதிகரிக்கும் வியாபாரத்துறையிலும் பிணக்குகள் தோன்றலாம்.

தனுசு: காதலர் வாழ்வில் கனிவான தினம். வரவிலும் திருப்தி காணும். கடமையிலும் புதிய ஆர்வம் பிறக்கும்.

மகரம்: செய்யும் தொழிலில் சிரமங்கள் தோன்றலாம் கொடுக்கல் வாங்கல் பிணக்கும் தலைதூக்கி நிற்கும். எவ்விடயத்தையும் ஆலோசித்தபின் செய்யவும்.

கும்பம்: பொதுப்பணிகளில் ஈடுபடுவீர்கள் புண்ணிய யாத்திரையும் மேற்கொள்ள படலாம். பூமிசுகமும் உண்டு. பிதாவழி ஆதரவும் உண்டு.

மீனம்: எதையுஞ்சிறப்புடன் சாதிப்பீர்கள். குடும்பத்திலும் குதூகலம் தென்படும். புதுமனை கட்டவும் நேரிடலாம். பொன்னாள்.

திருமலை
வே. ரவீந்திரன்

## சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி

(யாழ்ப்பாணம்)

30-9-'85 அன்று ஈழநாடு 5ம்பக்கத்தில் 'யாழ். மாவட்ட பாடசாலை போட்டி முதலிடம் பெற்றோர்'' என்ற தலைப்பில் வெளியான செய்தி பற்றி சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் திரு. வ நாகரட்ணம் பின்வருமாறு எழுதுகின்றார்

19 வயது ஆண்கள், குண்டெறிதல், பரிதிவட்டம் எறிதல், ஈட்டி எறிதல் ஆகிய போட்டிகளில் முதலிடம் பெற்றோர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்களே ஆகும். மேற்படி பத்திரிகையில் ஸ்கந்தவரோதய வித்தியாலயம் எனத் தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது ஸ்கந்தவரோதய வித்தியாலயம் வடமாநிலத்திலுள்ள பிறிதோர் பாடசாலையைக் குறிப்பதாகும்.

PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES,

COMPUTER PROGRAMMING COURSES
for
Professionals and School Leavers (6 Months)
Classes Commence on 12th October, 1985
Lectures by; Mr N S RAJAH, B Sc (Eng), Hons (London) A M I C E.
Saturdays:- 2 00 p m. to 4-00 p m
Sundays:- 9 30 a m to 11-30 a. m.

REGISTRAR,
Patrician Institute of Higher Studies,
59, St PATRICK'S ROAD, JAFFNA.

NATIONAL CERTIFICATE IN ENGLISH EXAM.

எமது இளம் சந்ததியினரின் எதிர்கால சுபீட்சத்திற்காக மேற்படி பரீட்சைக்கான
Week-end Lectures 12-10-85ல்
ஆரம்பமாகவுள்ளன.

காலம் 4 மாதங்கள் கட்டணம் ரூபா 125/-

★ ஆசிரியர் பிரபல ஆங்கில விரிவுரையாளர்
கந்தையா நவரேந்திரன்

தகைமை:
G. C. E. (O/L) ஆங்கில பாடத்தில் சித்தி
அல்லது
அதற்கு இணையான ஆங்கில அறிவு
அச்சடித்த பாடக்குறிப்புகள் Free.

மேலும் விபரங்களுக்கு:
CANTABIA INSTITUTE
21, Main Street, Jaffna.
Phone: 24201

# பவர்ஸ் உரம்
இணையற்றது

ரூபா 2,000/- க்கும் மேல்

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
5, மேல் சத்தம்ஸ் வீதி,
கொழும்பு-1.

MASTERS ABC 6/85

ராஜன்னி மினி
3"X3" திரைவாளில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
Chained Heat
அமெரிக்க பெண்களின்
சிறைச் வாழ்க்கையை
சித்தரிக்கும் படம்;

உஷா மினி
10-30, 2-30, 4-45; 6-45
DEADLY COMMANDO
பிலிப்பைன்சில் தேர்ச்சி பெற்ற கொமாண்டோ குழு, கொரில்லாக்களுடன் சேர்ந்து, கிளர்ச்சிக்காரர்கள் மீது மேற்கொள்ளும் அதிரடித் தாக்குதல்கள்.
(மிகப்புதிய வெளியீடு)

எம்பயர்
7 அடித் திரையில்
தினசரி 10-30, 2-30, 6-30, இரவு 9-00
விஜயகாந், நளினி;
"அலை ஓசை"
நாளை முதல்
தியாகராஜன் 3 வேடம்
எரிமலை

மனோகரா
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
டார்லிங்
Darling
டார்லிங்
பாரதிராஜ்- பூர்ணிமா- ஜெயராம்- கல்லாபெட்டி கிகாரம்
(கலர்)

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4x4 திரையில்
10-30, 2-30, 4-30 7-00
கொலை இயந்திரங்கள்
(WAR KILL)
கொரில்லாக்கள்/ பத்திரிகை நிருபரின் பயங்கர அனுபவம்.

நகரத்தில் புதிய படம்
லிபேர்ட்டி மினி
10-30, 2-30,
4-45, 7-00
FINAL MISSION
வயதுவந்தவர்கள் மட்டும்
தன் மனைவியையும், குழந்தையும் குண்டுவைத்து அழித்த பயங்கரவாதிகளைத் தேடித் திரிந்து தன்னந்தனியனாகச் சென்று அவர்களை நிர்மூலமாக்கும் சண்டைப் படம் தொடக்கம் முதல் முடிவு வரை நீங்கள் இதுவரை பார்த்திருக்கமுடியாத சண்டைகள் நிறைந்தது.

வெலிங்டன்
10-30, 2-30, 6 30
சக்திபிரசாத் - சுமதி நடித்த
சுவரில்லாத சித்திரம்
[கலர்]


## இந்து இளைஞர் பேரவை

(யாழ்ப்பாணம்)

யாழ்- மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் செயற்குழுக்கூட்டம் நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது.

பேரவைத்தலைவர் திரு: தி; சி சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர் திரு. எஸ். எஸ்; வரதராசா; தொண்டர் சேவை கிராமங்கள் தோறும் விஸ்தரிக்கப்படவேண்டும், இந்து இளைஞர் மன்றங்கள் சமய அறிவு வளர்ச்சியில் தொடர்ந்தும் உழைக்க வேண்டும் போன்ற தீர்மானங்களை சபையில் சமர்பித்து உரையாற்றினார்; இத்தீர்மானங்கள் சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பேரவைச் செயலாளர் சி பாலசிங்கம், பொருளாளர் சி. சற்குணநாதன் உட்பட பலர் உரையாற்றினார்கள்; (ச)

## பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் மின்சாரப் பகுதியில் கடந்த 32 வருடங்களாக வீதி விளக்கேற்றும் கடமையைச்செய்து வந்த திரு: சு. கந்தசாமி தமது சேவையினின்றும் இளைப்பாறுவதை முன்னிட்டு அவரைப் பாராட்டி கௌரவிக்குமுகமாக இன்று யாழ். தட்டாதெரு உப மின் நிலையத்தில் மின் அத்தியட்சகர் திரு ச ஞானசேகரம் தலைமையில் அவருக்கு பிரியாவிடை வைபவம் நடைபெறும்; (ஐ)

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சந்தைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், இறைச்சிக்கடைகள், கோழிக்கடைகள் ஆகியவற்றை அவ்வட்டவணையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு 01-01-1986 ஆம் திகதி முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 24-10-85 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணையும், கேள்விப்படிவ கட்டணம் ரூபா. 50/-ம் செலுத்துவதன் பேரில் 23-10-85 ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் சிறுப்பிட்டி யாழ். மாநகராட்சிமன்ற அலுவலகத்தில் வழங்கப்படும் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்படிவங்கள் யாழ் மாநகராட்சி மன்றத்தில் (இந்து வீதி) இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கு 24-10-85 ம் திகதி நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

இக் கேள்விகள் சம்பந்தமான இதர விபரங்களை மாநகராட்சிமன்ற (சிறுப்பிட்டி) அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. வி. கே சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்;

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்;
1- 10- 85.

### அட்டவணை

| குத்தகை விபரம் | குத்தகைகாலம் | கேள்விப்பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1 பெரியகடை மரக்கறி சந்தை | 1 வருடம் | 2000/- | 165600/- |
| 2. குருநகர் சந்தை | 1 ,, | 2000/- | 264000/- |
| 3. செங்குந்தா சந்தை | 1 ,, | 2000/- | 263511/27 |
| 4 நாவாந்துறை சந்தை | 1 ,, | 2000/- | 48101/- |
| 5. பாசையூர் சந்தை | 1 ,, | 2000/- | 36039/- |
| 6. கொட்டடி சந்தை | 1 ,, | 2000/- | 36000/- |
| 7. அரியாலை சந்தை | 1 ,, | 250/- | 10528/- |
| 8 கொழும்புத்துறை சந்தை | 1 ,, | 250/- | 1161/- |
| 9. நவீனசந்தை சைக்கிள் பாதுகாப்பு நிலையம் | 1 ,, | 2000/- | 30902/- |
| **கொட்டடி ஆட்டிறைச்சிக் கடைகள்** | | | |
| கடை இல. 1 | 2 வருடம் | 2500/- | 3400/- |
| கடை இல. 2 | 2 ,, | 2500/- | 40600/- |
| கடை இல. 3 | 2 ,, | 2500/- | 2951/- |
| கடை இல. 4 | 2 ,, | 2500/- | 3010/- |
| கடை இல. 5 | 2 ,, | 2500/- | 16955/30 |
| கடை இல. 6 | 2 ,, | 2500/- | 2 66/- |
| கடை இல. 7 | 2 ,, | 2500/- | 3005/- |
| கடை இல. 8 | 2 ,, | 2500/- | 3001/- |
| கடை இல. 9 | 2 ,, | 2500/- | 3010/- |
| கடை இல. 10 | 2 ,, | 2500/- | 3011/- |
| கடை இல. 11 | 2 ,, | 2500/- | 3000/- |
| **நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடைகள்** | | | |
| கடை இல. 1 | 2 வருடம் | 2500/- | 3101/- |
| கடை இல 2 | 2 ,, | 2500/- | 3250/- |
| கடை இல. 3 | 2 ,, | 2500/- | 3153/- |
| கடை இல. 4 | 2 ,, | 2500/- | 3151/- |
| கடை இல. 5 | 2 ,, | 2500/- | 3125/- |
| கடை இல. 6 | 2 ,, | 2500/- | 60000/- |
| கடை இல. 7 | 2 ,, | 2500/- | 3000/- |
| **குருநகர் இறைச்சிக் கடைகள்** | | | |
| மாட்டிறைச்சிக்கடை 1 | 2 வருடம் | 2500/- | 7014/- |
| கடை இல. 2 | 2 ,, | 2500/- | 7025/- |
| கடை இல. 3 | 2 ,, | 2500/- | 7010/- |
| கடை இல. 4 | 2 ,, | 2500/- | 7020/- |
| கடை இல. 5 | 2 ,, | 2500/- | 7115/- |
| கடை இல. 6 | 2 ,, | 2500/- | 7025/- |
| ஆட்டிறைச்சி கடை இல. 7 | 2 ,, | 2500/- | 7015/- |
| **பாசையூர் மாட்டிறைச்சிக் கடைகள்** | | | |
| கடை இல. 1 | 2 ,, | 2500/- | 27999/99 |
| கடை இல 3 | 2 ,, | 2500/- | 3850/- |
| நரிக்குண்டு மாட்டிறைச்சிக் கடை | 2 வருடம் | 2500/- | 4250/- |
| அரியாலை மாட்டிறைச்சிக் கடை | 2 ,, | 2500/- | 6450/- |
| முஸ்லீம் கல்லூரி வீதி ஆட்டிறைச்சிக் கடை | 2 ,, | 2500/- | 1975/- |
| ஜின்னாவீதி ஆட்டிறைச்சிக் கடை | 2 ,, | 2500/- | 2001/- |
| கோழிக் கடை இல: 1 | 2 ,, | 2500/- | 7120/- |
| இல: 2 | 2 ,, | 2500/- | 1150/- |
| இல: 3 | 2 ,, | 2500/- | 1050/- |

(1070)

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் முதலிலேயே ஆக்கப்படும் முற்றுண கட்டளை பற்றிய அறிவித்தல்

தெல்லிப்பழை, காலஞ்சென்ற ஐசாக் பொன்னையா துரைரத்தினம் என்பவரின் மரணசாதனவிடயத்தில்.

-மரணமெய்தியவர்;

மரணசாதன நியாயாதிக்கம்
இல. ரி/3903

ஐசாக் பொன்னையா துரைரத்தினம் கைம்பெண் ரேஸ் பரிமளம், 157, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

-மனுதார்,

மேலேயுள்ள இலக்கம் கொண்டவழக்கு மேலேபெயர் குறிப்பிட்டதுமான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும், 1985ம் ஆண்டு ஆடி மாதம் 22 ஆம்நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1985ம் ஆண்டு ஆடி மாதம் 22ந் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைதல்:
ச. மகேசன்,
மனுதாரின்
சட்டத்தரணி; 952

### பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீராவியடி கல்லூரி லேன் 44/4ம் இலக்கத்தில் வசிக்கும் காலஞ்சென்ற மருதப்பு கண்ணையாவின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கு நிர்வாகப்பத்திரம் விடயத்தில்.

காலஞ்சென்றவர்

மருதப்பு கண்ணையா மகன் ஜெகதீஸ்வரன், 44/4, கல்லூரி லேன், நீராவியடி, யாழ்ப்பாணம்.

மனுதார்.

வழ. இல: தத்துவம்/3909

எதிராக

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனம் இல்லாத மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25-ந் திகதி முறபகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனகட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது.

1985ம் ஆண்டு ஆவணி மாதம் 9ந் திகதி;

நீதிமன்றக் கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்,

வரைந்தது:
ச. மகேசன்,
மனுதாரின்
சட்டத்தரணி. 953

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# விபத்தில் ஒருவர் பலி!

[யாழ்ப்பாணம்]

மினி பஸ் - லான்மாஸ்டர் விபத்தில் ஒருவர் பலியானார்! மற்றவர் படுகாயமுற்றார்:

இணுவில் கோவில் வாசலடியில் நேற்று இவ்விபத்து இடம் பெற்றது

லான்மாஸ்டரில் இருந்த இணுவில் மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சாம்பசிவம் (30 வயது) என்பவரே பலியானவராவார்: அவருடன் இருந்த நடராசா கண்ணன் (20 வயது) படுகாயமடைந்தவர்;

இவ்விபத்துச் சம்பவத்தைத் தொடர்ந்து அங்குநின்றபொது மக்கள் மினிபஸ்ஸைத் தாக்கி சேதப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சேதுபதி

உரும்பிராய். கிழக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சேதுபதி அவர்கள் 3-10-85 அன்று சிவபதம் எய்தினார். இவர் சமூக சேவைப் பிரிவு மன்னார்க் கச்சேரியிலும் பின்பு யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபார நிலையத்திலும். பலவாண்டு சேவை செய்தார். இவர் செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராசம்மா தம்பதிகளின் அருமைப் புத்திரனும், காலஞ்சென்ற மனோன்மணி இரத்தினம். ஜெகநாதன். நல்லைநாதன், பரமேஸ்வரி-சுப்பிரமணியம் மற்றும் திருப்பதி (மலேசியா) அன்னலட்சுமி பொன்னுத்துரை பரமநாதன் ஆகியோரது அன்புச் சகோதரனும், கலைவாணி நாகேஸ்வரன் (கனடா), இராகுலன் (இங்கிலாந்து), உதயணன் (பிரான்ஸ்), அனுராதா மாணிக்கவாசகர் (சவூதி) ஆகியோரது அன்புத்தந்தையும் நாகேஸ்வரன், கௌரி, மாணிக்கவாசகர் ஆகியோரின் அன்பு மாமனாரும் சரவணன், சுதர்ஷனன், லவன் ஆகியோரின் அருமைப் பாட்டனும், துரைரத்தினம், இராமச்சந்திரன் என்போரது அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் அவர் சகோதரன் பரமநாதன் இல்லத்தில் நடைபெற்று 5-10-85 சனிக்கிழமை (இன்று) காலை 10-00 மணியளவில் அவ்வூர் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்க. (1079)

## மரண அறிவித்தல்

கொக்குவில்



### பிரமஸ்ரீ இ. சி. சோமசுந்தரஐயர்

தோற்றம்:
9-10-1911

மறைவு:
4-10-1985

கொக்குவில் பிரமஸ்ரீ இ. சி. சோமசுந்தரஐயர் காலமானார். (கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலய உரிமை பரிபாலரும்) அன்னார் காலஞ்சென்ற வாக்கிய பஞ்சாங்க கணிதர் இ. சி. இரகுநாதஐயரின் சகோதரரும், நாகரத்தினம்மாவின் அன்புக்கணவரும். சிவகடாட்சசர்மா மாவட்ட தொலைத்தொடர்புப் பரிசோதகர், காலஞ்சென்ற திருமதி இராஜேஸ்வரி, கிருஷ்ணசாமி சர்மா, திருமதி ஞானசவுந்தரி அம்மா, சிவசுப்பிரமணியசர்மா, செல்வி ஜெகதாம்பாள், திருமதி விஜயாம்பாள் நடராஜசர்மா, திருமதி அமிர்தாம்பாள். சிவகணேசசர்மா, சிவானந்தசர்மா, (தொலைத்தொடர்பு பரிசோதகர்). சிவராமலிங்கசர்மா (அர்ச்சகர் நல்லூர் கந்தசுவாமி கோவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசுப்பிரமணியசர்மாவின் மைத்துனரும், கிருஷ்ணசாமி சர்மா (சிங்கப்பூர்). சிவசுப்பிரமணியசர்மா, ராஜேஸ்வரி. சிவகணேசசர்மா, ஸ்ரீகோபாலசர்மா ஆகியோரின் மாமனாரும், கனகலதா, ஜெயலதா சுந்தரேஸ்வரன், சுபாகரன், சிவசுதன், தேவமனோகரி. துர்க்காதேவி, சியாமளாதேவி, சியாமளவதனா, ஆகியோரின் பாட்டனாரும், கொக்குவில் வாக்கிய பஞ்சாங்க கணிதர் இ. வெங்கடேசஐயரின் சிறிய தகப்பனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 5-10-85 சனிக்கிழமை நண்பகல் கொக்குவிலில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் தருபவர்;
சோ. சிவகடாட்சசர்மா
(1086) 04-10-85

## இம் மாத ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

அக்டோபர் மாதத்துக்குரிய ஒய்வூதியக் கொடுப்பனவுகள் யாவும் இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்பாகக் கொடுக்கப்படும். வழமைபோல வங்கியில் இவை கொடுக்கப்படும். (ஐ)

## பொதுஸ்தாப...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளன.

திருகோணமலைப் பிரஜைகள் குழு, லயன்ஸ் கழகம், சமய ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இன்றுகூடி திருகோணமலையில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஆலோசனை நடாத்தவுள்ளன.

அப்பாவித்தமிழர்கள் தங்களுக்கு நேரும் இடையூறுகள் பற்றி திருகோணமலைப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுகூட புகார் செய்யமுடியாமல் தவிக்கின்றனராம்

அங்கு புகார் தெரிவிக்கச் செல்லும் தமிழர்களின்முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளாமல் திருப்பிவிடப்படுவதுடன் பன்குளம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடுகளைத் தெரியுங்கள் என்று விரட்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலையிலிருந்து 17 மைல் தூரத்தில் பன்குளம் பொலிஸ்நிலையம் இருக்கிறது ஆனால் அங்கு செல்பவர்கள் மீண்டும் உயிருடன் திரும்பி வருவார்கள் என்பதற்கு எதுவித உத்தரவாதமுமில்லையெனக் கூறப்படுகிறது;

திருஞானசம்பந்தர் வீதியில் வசிக்கும் பொன்னம்பலம் சுந்தரமூர்த்தி [25 வயது] என்பவர் அவரது வீட்டில்வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் யானைமார்க்சோடா கிளை ஸ்தாபனத்தில் தொழில் புரியும் 3 ஊழியர்களைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர் இவர்கள் மூவரும் கடந்த 4-ம் திகதி அப்பகுதியில் உள்ள வீடுகள் எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அகதிகள்முகாமில் இருந்தவர்கள் ஆனால் மீண்டும் மேற்குறிப்பிட்ட வேலைத்தலத்துக்கு வந்ததும் அங்கு கடமையாற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் அம்மூவரையும் தீவிரவாத இயக்கத்தில் இருந்ததாகப் பொலிசாருக்குத் தவறான தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டார்களாம்

இப்படியே எஞ்சியிருக்கும் அப்பாவித்தமிழர்கள் நாளுக்கு நாள் கைதுசெய்யப்பட்டுவருவதாக பொது ஸ்தாபனங்கள் கவலை தெரிவிக்கின்றன.

இது குறித்தே அவர்கள் அமைச்சரிடம் புகார் தெரிவிக்கவுள்ளனர்;

## மற்றுமொரு கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ் மணிக்கூட்டு வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து 24 000 ரூபா பெறுமதியான நகைகள், 7 000 ரூபா ரொக்கப்பணம் என்பன பட்டப் பகலில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வீட்டிற்குச் சென்ற இனந் தெரியாத இளைஞர்கள், வீட்டு உரிமையாளர்கள் இல்லாத வேளை வீட்டை உடைத்து இக்கொள்ளையை நடாத்திச் சென்றுள்ளனராம்.

இக்கொள்ளையால் பாதிக்கப்பட்டவர்கள் 'மற்றொன்' என்ற தமது பிக வெளியிட்டுள்ள பிரசுரமொன்றில்; தமிழரின் சுபீட்சத்திற்காகப் பாடுபடும் இயக்கங்களுக்குஇது போன்ற கொள்ளைகள் ஒரு சவாலாக அமைந்துள்ளதாகவும் இக்கள்ளரை இனங்கண்டு கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை மீட்டுத்தரும்படியும் கேட்டுள்ளனர். (ச)

## காங்கேசன்துறையை கலக்கிய சம்பவம்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைப் பகுதியில் நேற்றுக்காலை கேட்ட பலத்த வெடிச்சத்தங்களால் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பும் பீதியும் ஏற்பட்டது.

காங்கேசன்துறை கடற்கரைப் பக்கமாக ஆயுதப் படையினர் முகாமிட்டுள்ள பகுதியிலிருந்து இன்று காலை 8 மணியளவில் பலத்த துப்பாக்கி வெடிச் சத்தங்களும் பீரங்கி வெடிச்சத்தங்களும் கேட்ட வண்ணம் இருந்தன; அச்சமயம் ஹெலிகோப்டர் ஒன்றும் தாழப்பறந்து கொண்டிருந்தது.

வெடிச்சத்தங்கள் தொடர்ச்சியாக கேட்ட வண்ணம் இருந்தமையால் இப்பகுதி மக்கள்மத்தியில் பெரும் பரபரப்பும் பீதியும் ஏற்பட்டது

காங்கேசன்துறை சீமெந்து ஆலைக்கு கடமைக்குச் சென்ற ஊழியர்கள் பலரும் அச்சத்தினால் திரும்பிச் சென்றனர். தொழிற்சாலை ஊழியரிடையேயும பெரும் பீதி ஏற்பட்டிருந்தது

## புதிய சங்கம் உதயம்

(யாழ்ப்பாணம்)

'யாழ். தூரசேவை போக்குவரத்து உரிமையாளர் சங்கம்' என்ற பெயரில், புதிய சங்கம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள புகையிலைக் கூட்டுத்தாபனக்கட்டடத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

இம்மாதம் 13ம் தேதி நிரந்தர கமிட்டி ஒன்று தெரிவு செய்வதென்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது:

நேற்று தெரிவான அமைப்புக் குழுத்தலைவராக திரு. எம். விஜயரத்தினமும், உப-தலைவராக திரு. ஆர். இராசலிங்கமும், செயலாளராக ஜனாப் எம். ஏ சி. மொபினும், தனாதிகாரியாக ஜனாப் ஏ. எஸ். எம். ரசீதும் தெரிவு செய்யப்பட்டதுடன் 5 பேர் கொண்ட கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது. (க)

## தொடர்ந்து வரும் அகதிகள்

(யாழ்ப்பாணம்)

மூன்று தீவிலுள்ள திருமலை அகதிகளில் சுமார் 85 பேர். நேற்றுமுன்தினம் படகுகள் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இவர்கள் யாழ். கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள தமிழ் மகளிர் பேரவையினால் நடத்தப்படும் அகதிமுகாமில் தஞ்சமடைந்துள்ளனர்.

இன்னும் பல அகதிகள் யாழ்ப்பாணத்துக்கு வருவார்கள் என்று இங்கு வந்த அகதிகள் தெரிவித்தனர்.

இந்த அகதிகள் முகாமில் திருகோணமலை, கிளிவெளி, சாம்பல்தீவு, கன்னியாபோன்ற இடங்களைச் சேர்ந்த 20 குடும்பங்களைக் கொண்ட 85 பேர் தங்கியுள்ளனர். இவர்களில் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 40 பேர் உள்ளனர்.

தமிழ் மகளிர்பேரவை நடத்தும் அகதி முகாமின் முகாமையாளரான டாக்டர் ப. சகிதரா; தமிழ் அகதிகள் எத்தனை பேரையும் பராமரிக்கத் தாங்கள் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். (ஐ)

## 4 லட்சம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வும், அனுராதபுர மாவட்டத்தில் 2,50,000 ரூபாவும் சேர்க்கப்பட்டுள்ளது.

## கான்ஸ்டபிள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மனைவியும் தமது நான்கு பிள்ளைகளையும் வீட்டில் விட்டு. சந்தைக்குச் சென்றபொழுதே கடத்திச்செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கான்ஸ்டபிள் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்

நான்கு சைக்கிள்களில் வந்த இனந்தெரியாதநபர்கள் துப்பாக்கிமுனையில் பயமுறுத்தி வள்ளம் ஒன்றில் ஏற்றிக் கொண்டு தலைமறைவாகிவிட்டனராம். (மா)

### "கலாநிகேதம் நடனாலய". வாணி விழா

[யாழ்ப்பாணம்]

யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நாளை பிற்பகல் வாணி விழாவும் நடன நிகழ்ச்சியும் நடைபெறும்.

'கலா நிகேதம்' ஆதரவில் நடைபெறும் மேற்படி விழாவில், பாலர்பிரிவு, மேற்பிரிவு, மாணவ மாணவியரின் பல்வேறு கலைநடனநிகழ்ச்சிகளும்நடைபெறும்

பிரதம விருந்தினர் நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி. கௌரவ விருந்தினர்கள் திரு வி சிவசாமி (தலைவர், சமஸ்கிருதத் துறை யாழ்.பல்கலைக்கழகம்). திருமதி ஞா பத்மலோசனி (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடம்). நிகழ்ச்சிகளை நாட்டியக்கலைஞரி அதிபர் செல்வி விநோதினி லிங்கநாதபிள்ளை தயாரித்தளிக்கின்றார். (நா)

## நன்றி கூறுகிறோம்

வீடியோ பிரசாத் நிர்வாகியான சே. இராமநாதனை கடத்திச் சென்ற புனிதமான இயக்கத்தினர் எமது வேண்டுகோளை ஏற்று மனிதாபிமான முறையில் விடுதலை செய்தமைக்காக அவ்வியக்கத்திற்கு நன்றி கூறுவதுடன் எனது விடுதலைக்காக உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சே. இராமநாதன் குடும்பத்தினர்
(1077)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி. 68-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu Telephone: 22389 — 24189